**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03ம் நாள் செவ்வாய்கிழமை**

**R.L.T.O.P.No. 2/2023**

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW1–ன் வாக்குமூலம் (1969 –ம் ஆண்டின் 44 –வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லதா | தாலுக்கா | : திருவாரூர் |
| க/பெ | : பாரி | கிராமம் | : திருவாரூர் டவுன் |
| ஜாதி | : | தொழில் | : வீட்டுக்குடிதனம் |
| சமயம் | : | வயது | : 59/26 |

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவின் எதிர்மனுதாரரின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். எதிர்மனுதாரர் தரப்பில் எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

கடந்த 20.06.2019ம் தேதியிட்ட திருவாரூர் மாவட்ட தீயணைப்புத்துறை உதவி மாவட்ட அலுவலர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய கடிதம் நகல் **எ.சா.ஆ.1,** ஆகவும்

கடந்த 21.06.2019ம் தேதியிட்ட திருவாரூர் நகர காவல் நிலைய கு.எண்.220/2019 முதல் தகவல் அறிக்கை சார்வு நகல் **எ.சா.ஆ.2,** ஆகவும் குறியீடு செய்து மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2---** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.03.03 18:28:17 +0530